முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் தை மாதம் 29 திகதி முதல்
சுபகிருது வருடம் மாசி மாதம் 07 திகதி வரை
(12.02.2023 ஞாயிறு முதல் 19.02.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. சரவணச்சுடரேற்றி ஞானமதை
   சகலருக்கும் அருளும் வண்ணம்
   பிரணவக்குடில் படைத்த ஞானியே
   பெருந்தர்ம பலம்கொண்ட அரங்கனே
2. அரங்கனே உமைபோற்றி நன்கு
   அகத்திய மகரிஷியும் வாரஆசி
   வரங்களென இந்தியா தமிழகத்தில்
   வளமான கலைதிங்கள் இருபான் நவதிகதிமேல்
3. மேலாக சுபகிருது சால்திங்கள் நாததிகதிவரை
   மொழிகுவேன் நடக்கும் நிகழ்வாக
   கோலமதாய் வருங்கால பலனாகஉரைப்பேன்
   கூறிட வரலாறு பல கண்டநல்
4. கண்டநல் இந்தியா தமிழகம்
   காணுங்கால் கலியின் கொடுமையாக
   தொண்டதனை சேவைதயவை மறந்து
   தன்னலம் பேராசை வழிஉழலும்
5. உழலும் அதிகார வர்க்கங்களை
   ஊழல் வாதிகளை கொண்டு
   சுழலும் தேசமாக மாறிஇருக்க
   சித்தம் தெளிவு காணும்படி
6. காணும்படி இவை மாந்தர்களை
   கந்தனே தண்டிக்கும் காலமாக
   ஞானசித்தர் காலம் கனியஇருக்க
   ஞானவழி நம்பகமின்றி வாழும் மக்கள்
7. மக்களெல்லாம் நம்பிக்கை வைத்து
   மகான் அரங்கன் வழிவந்து
   பக்குவமிலா நடக்கும் செயல்களை
   பதவியை துஷ்பிரயோகம் செய்யும்
8. செய்யும் அதிகார வர்க்கங்களும்
   செய்வதை நிறுத்தி திருந்தி
   அய்யமற ஆறுமுகனார் செயலாக
   அடிபணிந்து அரங்கன் வழிதனை

9. வழிதனை ஏற்று உண்மைபட
வாழும் காலமே கிடைத்தவாய்ப்பை
அழியாமை பெறும் வண்ணமாக
அனைவருக்கும் பயன்தரும் சேவையாக
10. சேவையாக ஆற்றி இனிதே
சிறந்த தேசமாக இந்தியா தமிழகம்
அவணியில் வரலாறு படைக்க
ஆளுமைகள் ஞானவழி வரவே மாற்றம்காணும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் தை மாதம் 29ம் நாள் 12.02.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் மாசி மாதம் 7ம் நாள் 19.02.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

சகல வல்லமைகளையும் ஞானமும் அளிக்கும் சரவணச் சுடரினை உலகிற்கு அளித்து உலக மக்கள் அனைவருக்கும் சரவண ஜோதி மூலம் ஞானத்தினை வழங்கிடவே ஓங்காரக்குடிலினை ஞானசபையாக அமைத்து ஞானம் அளித்து காக்கின்ற மகா ஞானியே எல்லையில்லாது தர்மங்களை செய்து தருமபலம் அளவிலாது பெற்ற தர்மராசனே ஆறுமுக அரங்க மகா தேசிகனே ! உம்மை போற்றியே அகத்திய மகரிஷி யானும் சுபகிருது வருடம் தை மாதம் 29ம் நாள் 12.02.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் மாசி மாதம் 7ம் நாள் 19.02.2023 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள கால நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

ஆற்றல் மிக்க ஞானிகள் தோன்றி வழி நடத்தப்பட்டதும் அநேகம் அற்புதமான வரலாறு மிகுந்திட்ட இந்தியா, தமிழகம் தற்சமயம் கலியுகத்தின் கொடுமையினாலே தொண்டுள்ளமும், மக்கள் சேவையையும் தயவும் மறந்து தன்னலம் மிகுந்து பேராசையினால் உழன்று மயக்கமான அதிகார வர்க்கங்களையும் ஊழல்வாதிகளையும் உடையதாக மாறி இருக்கின்றதப்பா.

அவர்களது சிந்தை தெளிவடையும் நோக்கில் சிந்தை தெளிந்து தயவின் வழி அவர்களும் வரவேண்டியே கருணையே வடிவான முருகப்பெருமான் நேரில் தோன்றி கண்டித்தும் தண்டித்தும் நல்வழிபடுத்தும் விதமாக நாட்டினில் ஞானசித்தர் காலம் விரைந்து உருவாக இருக்குதப்பா.

ஆயினும் ஞானமே சிறந்தது என்பதை அறியாமலும் ஞானவழியில் நம்பிக்கை கொள்ளாமலும் தன்னலமாய் ஞானத்தைப் பற்றி அறியாமல் வாழும் மக்கள் எல்லாம் இனிமேலாகினும் ஞானத்திலும், ஞான வழியிலும், ஞானத்தலைவன் முருகப்பெருமான்மேலும் நம்பிக்கை வைத்து உண்மை ஞானவழி போதிக்கும் மகான் ஆறுமுக அரங்க மகா தேசிகனார் கூறும் ஞான நெறிகளை, தயவுநெறிகளை ஏற்று பின்பற்றி நடந்து இதுவரை அவர்கள் கடந்து சென்ற பக்குவமில்லாத செயல்களை எல்லாம் தொடர்ந்து செய்திடாமல் திருந்தி வாழ்வதுடன் மக்கள் சேவைக்காக வந்திட்ட பதவியை, அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும் அதிகார வர்க்கங்களும் தீய செயல்பாடுகளை நிறுத்தி திருந்தி நடப்பது அனைத்தும் முருகப்பெருமானின் செயலே என உளமார நம்பி ஏற்று முருகப்பெருமானின் திருவடி பணிந்து அரங்க மகான் கூறும் தூய சன்மார்க்க வழியில் நடந்து அவரவரும் அழிவிலாத நிலையை பெறும் விதமாக மக்கள் அனைவருக்கும் பயன் தருகின்ற சேவைகளை செய்து இந்திய தேசத்தை, தமிழகத்தை

உலகினிலேயே சிறந்த நாடாக மாற்றிடவே அற்புத வரலாறு படைத்திட அவரெல்லாம் ஞானவழியில் வர வேண்டுமப்பா.

மனம் திருந்தி அனைவரும் ஞானவழி வர இந்த தேசம் விரைந்து மாற்றம் அடைந்து உலகினில் வரலாறு படைக்கும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–